## தமிழ்நாட்டில் 44 மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு

# ‘நமோ ட்ரோன் தீதி’ பயிற்சி; அனைவருக்கும் ட்ரோன்கள் விநியோகம்!

### மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்விக்கு – ஒன்றிய அரசு பதில்!



புதுடெல்லி, ஆக. 13-

தென் சென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன், முந்திரி, கோகோ மற்றும் கொட்டை வகை பயிர்கள் உள்ளிட்ட அதிக மதிப்புள்ள வேளாண் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், ‘நமோ ட்ரோன் தீதி’ திட்டத்தின் செயல்பாடு மற்றும் தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்திற்கான நிதி தொடர்பாக மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதாவது, முந்திரி, கோகோ மற்றும் கொட்டை வகை பயிர்கள் போன்ற இந்தியாவின் அதிக மதிப்புள்ள வேளாண் பயிர்களின் உற்பத்தி மற்றும் விளைச்சலை அதிகரித்து, அவற்றை உலகளவில் உயர்தர பிராண்டுகளாக மாற்றுவதற்கு வகுக்கப்பட்டுள்ள கொள்கைகள் என்ன? ‘நமோ ட்ரோன் தீதி’ திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மாநில வாரியாக இதுவரை எத்தனை வேளாண் ட்ரோன்கள் வழங்கப்பட்டுள்ளன? குறிப்பாக தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் எத்தனை மகளிர் சுயஉதவிக் குழுவினர் பயிற்சி பெற்றுள்ளனர்? மேலும், பருவநிலை மாற்றத்தைத் தாங்கும் வேளாண்மையை ஊக்குவிக்கும் தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தை விரிவுபடுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையமைச்சர் ராம் நாத் தாக்கூர் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில் :-

முந்திரி, கோகோ மற்றும் கொட்டை வகை பயிர்கள் உள்ளிட்ட அதிக மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டு இயக்கத்தை (Mission for Integrated Development of Horticulture - MIDH) மத்திய அரசு 2014-15ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் நாற்றங்கால்களை அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல், சாதாரண மற்றும் அதிக அடர்த்தி முறையில் சாகுபடிப் பரப்பை விரிவுபடுத்துதல், வயதான தோட்டங்களைப் புதுப்பித்தல், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளைப் பின்பற்றுதல், அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, பதப்படுத்துதல், சந்தைப்படுத்துதல் மற்றும் பிராண்டிங் உள்ளிட்டவற்றுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. 2025ஆம் ஆண்டில் MIDH திட்டத்தின் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் திருத்தப்பட்டு, முந்திரி, கோகோ மற்றும் கொட்டை வகை பயிர்களுக்கு செலவின வரம்புகள் உயர்த்தப்பட்டதுடன் கூடுதல் ஆதரவும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் முந்திரி ஆராய்ச்சி இயக்குநரகம் (ICAR-DCR), மேம்படுத்தப்பட்ட முந்திரி ரகங்கள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, அதிக அடர்த்தி நடவு உள்ளிட்ட தொழில்நுட்பங்களை உருவாக்கி வருகிறது. நேத்ரா கங்கா, நேத்ரா ஜம்போ-1, நேத்ரா உபயா மற்றும் நேத்ரா ஜம்போ-2 உள்ளிட்ட முந்திரி ரகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதேபோல், ICAR-CPCRI மூலம் கோகோவின் உற்பத்தி, தரம் மற்றும் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான புதிய ரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

நமோ ட்ரோன் தீதி திட்டத்தின் கீழ் 2023-24ஆம் ஆண்டில் நாடு முழுவதும் மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த ட்ரோன் தீதிகளுக்கு 1,094 ட்ரோன்கள் வழங்கப்பட்டுள்ளன. பயனாளிகள் அனைவரும் சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொலைதூர விமானி பயிற்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சி பெற்றுள்ளனர்.

இதில் தமிழ்நாட்டில் 44 நமோ ட்ரோன் தீதிகள் பயிற்சி பெற்றுள்ளனர். பயிற்சி பெற்ற 44 பேருக்கும் ட்ரோன்கள் வழங்கப்பட்டுள்ளன என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. மாநில வாரியான பட்டியலில் அதிகபட்சமாக கர்நாடகாவில் 145, உத்தரப் பிரதேசத்தில் 128, ஆந்திரப் பிரதேசத்தில் 108, ஹரியானாவில் 102 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ட்ரோன்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் மாநில அரசின் திட்டம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. தமிழ்நாடு அரசு அளித்த தகவலின்படி, சிறுதானிய மேம்பாட்டு நடவடிக்கைகளை திறம்பட செயல்படுத்த மாநிலத்தில் 26 சாத்தியக்கூறுகள் கொண்ட மாவட்டங்கள் இரண்டு சிறப்பு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சிறுதானியங்களின் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதை இந்த இயக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

2023-24 முதல் 2025-26 வரை தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்திற்கு ரூ.178.49 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்ட நிலையில், ரூ.164.73 கோடி செலவிடப்பட்டுள்ளது. சிறுதானிய சாகுபடியை ஊக்குவித்தல் மற்றும் பருவநிலை மாற்றத்தைத் தாங்கும் வேளாண் நடைமுறைகளை வலுப்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம் சுமார் 10.17 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என்றும் பதிலில் கூறப்பட்டுள்ளது.

2026-27ஆம் ஆண்டுக்கு தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கத்தின் (NFSNM) ஊட்டச்சத்து தானியங்கள் - ஸ்ரீ அன்னா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்பை சேர்த்து ரூ.43.94 கோடி (ரூ.4,394.197 லட்சம்) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் 5.05 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி –

# 3 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் செயல்பாடு!

### க.செல்வம் எழுப்பிய கேள்விக்கு – ஒன்றிய அரசு பதில்!



புதுடெல்லி, ஆக. 13-

தமிழ்நாட்டில் கால்நடை வளர்ச்சி மற்றும் கால்நடை மருத்துவ சேவைகளை மேம்படுத்த ஒன்றிய அரசு பல்வேறு திட்டங்களின் கீழ் நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்கி வருவதாக, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு தெரிவித்துள்ளதாவது:

தேசிய கால்நடை இயக்கம் (NLM), கால்நடை சுகாதாரம் மற்றும் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் (LHDCP), தேசிய விலங்கு நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் (NADCP), கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்த மாநிலங்களுக்கு உதவும் திட்டம் (ASCAD), நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் (MVUs) உள்ளிட்ட திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டில் கால்நடை மருத்துவ சேவைகள் வலுப்படுத்தப்பட்டு வருவதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

**ரூ.202.38 கோடி தடுப்பூசி நிதியுதவி**

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு NADCP மற்றும் CADCP திட்டங்களின் கீழ் கால்நடைகளுக்கு தடுப்பூசி செலுத்த ரூ.2,023.84 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 245 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகளின் கொள்முதல் மற்றும் செயல்பாட்டிற்காக ரூ.7,565.36 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ASCAD திட்டத்தின் கீழ் கால்நடை சுகாதாரம் தொடர்பான மாநில முன்னுரிமைப் பணிகளுக்காக ரூ.1,667.01 லட்சம் வழங்கப்பட்டுள்ளதுடன், இந்தக் காலகட்டத்தில் சுமார் 8.66 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் 5.05 லட்சம் தடுப்பூசிகள்**

2025-26 மற்றும் 2026-27ஆம் ஆண்டில் ஆகஸ்ட் 5, 2026 வரை, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கால்நடைகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் 5,05,826 கால்நடைகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. மேலும், மாவட்டத்தில் 3 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் (MVUs) செயல்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரத்தில் கால்நடை மருத்துவ உட்கட்டமைப்பு மேம்பாடு

2021 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில், மாநில அரசு அளித்த தரவுகளின் அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3 கால்நடை மருத்துவ உட்கட்டமைப்புகள் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

நோய் கண்காணிப்பு மற்றும் இனப்பெருக்க மேம்பாட்டிற்கு நடவடிக்கைகள் கால்நடை நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து கட்டுப்படுத்த மத்திய நோய் கண்டறியும் ஆய்வகங்கள், பிராந்திய நோய் கண்டறியும் ஆய்வகங்கள் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் நிறுவனங்கள் மூலம் நோய் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், ராஷ்ட்ரிய கோகுல் மிஷன் மூலம் நாட்டின் பாரம்பரிய கால்நடை இனங்களைப் பாதுகாத்தல், மரபணு மேம்பாடு, பால் உற்பத்தி மற்றும் கால்நடைகளின் உற்பத்தித் திறனை உயர்த்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

கால்நடை வளர்ப்பு மாநிலப் பாடமாக இருந்தாலும், தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும் கால்நடை சுகாதாரம், உற்பத்தித் திறன் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதற்கான மத்திய அரசின் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

## முத்தமிழின் மூதறிஞர் நினைவஞ்சலி:

# செம்மொழியின் தலைமகனே ! செகம்போற்றும் பெருமகனே!

### உமை நினைந்து போற்றாமல் உய்வில்லை நின்வளர்ப்புத் தொண்டனுக்கு!



உலகுக்கே முதன்மொழியாய் தொல்சீர் பெற்று
உயர்ந்ததனிச் செம்மொழியாய் பாரில் வாழ்ந்து
கலங்குபகை அறியாத எந்தை நாட்டில்
களங்கமற்ற பலவராயம் ஆக்கித் தந்து
விலங்குகளும் விளித்துவக்கும் அம்மா என்னும்
விஞ்சுபுகழ் இயலொலியை முதலாய்க் கொண்டு
இலங்குகின்ற முதன்மொழியே! எந்தன் தாயே!
இரவாத செந்தமிழே! நின்தாள் போற்றி!

நான் உரைத்த உயர்ந்ததனிச் செம்மொழிக்கு
நாட்டளவில்
அழியாத ஒப்புதலை அகிலமெலாம் போற்றும்வகை
பெற்றளித்த பெருமகனே! பேருலகின் தலைமகனே!
என்நாட்டின் முதலமைச்சாய் எல்லாமும் அறிந்தவரே!
குவலயத்தை அழைத்து வந்து கோவையிலே கூட்டிவைத்து
அறிஞர்களை அரங்கேற்றி அவனிபுகழ் மாநாடாய்
செம்மொழியின் மாநாட்டை சிறப்போடு நடத்திவிட்டாய்
அனைத்துலகும் தமிழ்வாழ அன்னைத்தமிழ் புகழ்மேவ


நாளைய தலைமுறைக்கு நலம்பயக்கும் தேவைகளை
எடுத்தியம்பும் மொழியாக எம்மொழியை வளர்ப்பதற்கு
செம்மொழியாம் தமிழ்மொழியை செகமுழுதும் கற்பதற்கு
மென்பொருளாய்ப் பலவழிகள் மேதினிக்கு வழங்கியுள்ளீர்
மெல்லத்தமிழ் சாகுமென்று மெய்யறியார் புகன்றதனைப்
பொய்யாக்கும் வழிமுறையை பொறுப்போடு செய்துள்ளீர்
தாய்த்தமிழை வளர்ப்பதற்கும் தமிழ்ப்பெயர்கள் சூடுதற்கும்
உலகத்துத் தமிழரெலாம் ஒருமனதாய் முடிவெடுக்க

பெருமளவில் வழிதுலக்கும் பெருமைமிகு மாநாட்டை
இருதுருவம் ஒருங்கிணைந்து இறுமாந்து போற்றுமாறு
பெருமகனாம் தமிழ்வேந்தே! பேருலகில் நீமுடித்தாய்
எண்பத்து ஏழான ஏற்றமிகு அகவையிலே

இருபத்து ஏழென்ற இளமைதவழ் தமிழ்மகனாய்
நீமுடித்த பணியிதனை விஞ்சுதற்கு எவர்வருவார்?
இனியொருவர் பிறப்பதற்கு இவ்வுலகில் வழியுண்டா?
மலைத்துப்போய் நிற்கிறார்கள் மாண்புமிகு சான்றோர்கள்
குறைகாணும் குணக்கேடர் குறுமதிக்கு உரிமையாளர்
இமயமாக முயன்றாலும் நடவாது இவ்வுலகில்;
சத்தியமாய்ச் சொல்லுகின்றேன் சாகாத வரம்படைத்த
சங்கத்தமிழ் பெருமொழியாய் தங்கத்தமிழ் வளர்ந்தோங்கும்
எங்கள் தமிழ் பெருவேந்தே! உங்கள் புகழ் எப்போதும்
பெருமக்கள் போற்றுதலால் பேருலகில் நிலைத்திருக்கும்;

எம்மொழிக்கும் வாய்க்காத இமயமன்ன பெரும்பேறு
எம்தலைவர் எம்மொழிக்குத் தலைமகனாய் வாய்த்ததென்பேன்
“நின்றுபோகிறது மலையின் சிகரம்
நித்தம் வளர்கிறது உங்கள் புகழ் உயரம்”
இஃதுண்மை உலகறிந்த பேருண்மை பெருந்தகையே!
செம்மொழியின் தலைமகனே செகம்போற்றும் பெருமகனே!
உமை நினைந்து போற்றாமல் உய்வில்லை நின்வளர்ப்புத் தொண்டனுக்கு
வாழிவாழி நூற்றாண்டு பலவாக நினது புகழ் வாழிவாழி


**தேசிய நல்லாசிரியர்**
**பெ.ந.பழனிச்சாமி**
**இலக்கிய அணித் தோற்றுநர்,**
**நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க.**



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# வை. பெருமாள்

### ஆகஸ்ட் 13 (2001)



**தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை பொதுச்செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர். ஏறத்தாழ 30 ஆண்டுகளாக தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவர்.**

**தளபதி அவர்கள் தலைமையில் குடிநீர் பிரச்சினைக்காக நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**2001 ஜூன் மாதத்தில் தலைவர் கலைஞர் அவர்களை அ.தி.மு.க. அரசு காவல்துறை காட்டுமிராண்டித்தனமான முறையில் கைது செய்ததைக் கண்டித்து நடைபெற்ற கண்டனப் பேரணியில் தொழிலாளர் அணிக்கு தலைமை தாங்கி முழக்கமிட்டு சென்றபோது மயக்கமுற்றார். அதுவே அவரது கடைசி பயணமானது.**

**“பொதுவாக அவருடைய வடிவம் ஆஜானுபாகுவான உருவம். புராணீக பாஷையிலே சொல்ல வேண்டுமென்றால், தி.மு.கழகத்தினுடைய “பீமசேனன்” வை.பெருமாள் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த உருவமா சாய்ந்துவிட்டது என்று நானும் எண்ணியெண்ணிப் பார்த்தேன். ஏங்கியேங்கித் தவித்தேன்” என தலைவர் கலைஞர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## கடந்த மூன்று ஆண்டுகளில் DILRMP திட்டத்தின் கீழ்

# மாநில வாரியாகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு?

### மக்களவையில் – கோவை முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 13-

நில ஆவணங்களின் நிர்வாகத்தை நவீனமயமாக்கவும், நிலம் அல்லது சொத்து தொடர்பான தகராறுகளுக்கான வாய்ப்பைக் குறைக்கவும், நில ஆவணங்களைப் பராமரிக்கும் முறையில் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கவும், 2008ல் அங்கீகரிக்கப்பட்ட ‘தேசிய நில ஆவணங்கள் நவீனமயமாக்கல் திட்டத்தை’ (NILRMP), 2016ல் ‘டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்கள் நவீனமயமாக்கல் திட்டமாக’ (DILRMP) மத்திய அரசு மாற்றியமைத்துள்ளதா? ஆம் எனில், அது குறித்த விவரங்கள் என்ன?

மாற்றியமைக்கப்பட்ட DILRMP திட்டம் தனது நோக்கத்தை முழுமையாக அடைந்துள்ளதா? ஆம் எனில், அது குறித்த விவரங்கள் என்ன?

மேம்படுத்தப்பட்ட DILRMP திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட/ செயல்படுத்தப்பட்ட முக்கிய கூறுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த விவரங்கள் என்ன? கடந்த மூன்று ஆண்டுகளில் DILRMP திட்டத்தின் கீழ் மாநில வாரியாகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு? என்று கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் இணை அமைச்சர் டாக்டர் சந்திர சேகர் பெம்மசானி அளித்துள்ள பதில் வருமாறு :

தேசிய நில ஆவண நவீனமயமாக்கல் திட்டம் (NLRMP) 21.8.2008 அன்று மத்திய நிதியுதவி பெறும் திட்டமாக அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. பின்னர், ‘டிஜிட்டல் இந்தியா’ முன்னெடுப்பின் கீழ் மத்தியத் துறைத் திட்டமாக மாற்றியமைக்கப்பட்டு, 1 ஏப்ரல் 2016 முதல் ‘டிஜிட்டல் இந்தியா நில ஆவண நவீனமயமாக்கல் திட்டம்’ (DILRMP) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது, இத்திட்டத்திற்கு மத்திய அரசு 100% நிதியுதவி அளிக்கிறது. இத்திட்டம் 203031 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நில ஆவணங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டதன் மூலம், நில ஆவணங்களை அணுகுவது எளிதாக்கப்பட்டு வெளிப்படைத்தன்மை அதிகரித்துள்ளது, இதன் விளைவாக நிலம் அல்லது சொத்து தொடர்பான தகராறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைக்கப்பட்டுள்ளன.

‘டிஜிட்டல் இந்தியா நில ஆவணங்கள் நவீனமயமாக்கல் திட்டம்’ (DILRMP) என்பது தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் ஒரு திட்டமாகும். மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் முழுவதும் நில ஆவணங்களை கணினிமயமாக்குதல், டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் நவீனமயமாக்குதல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. 06.08.2026 நிலவரப்படி, 99.90% உரிமைப் பதிவேடுகள் (RoRs) கணினிமயமாக்கப்பட்டுள்ளன, 97.43% நில வரைபடங்கள் (Cadastral Maps) டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன, 77.68% நில வரைபடங்கள் புவியியல் ரீதியாகக் குறிக்கப்பட்டுள்ளன (GeoReferenced) 69.04% நிலப்பகுதி களுக்குத் தனித்துவ நிலப்பகுதி அடையாள எண் (ULPIN) வழங்கப்பட்டுள்ளது, 93.71% வருவாய் நீதிமன்றங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன மற்றும் 99.96% சார்பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

DILRMP 3.0இன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள முக்கிய கூறுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த விவரங்கள் இணைப்பு Iஇல் கொடுக்கப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் DILRMPஇன் கீழ் செலவிடப்பட்ட மொத்தத் தொகை குறித்த விவரங்கள், மாநில வாரியாக இணைப்பு II இல் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார்.

# கொலம்பியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்!

### 100க்கும் மேற்பட்டோர் பலி!

கொலம்பியா, ஆக. 13–

கொலம்பியாவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் காரணமாக இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 111ஆக உயர்ந்துள்ளது. பல கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. இடிந்து விழுந்த கட்டிட இடிபாடுகளில் பலர் சிக்கியிருப்ப தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இந்த நிலையில், சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்பு மற்றும் பொருட்சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து, கொலம்பியா அவசரநிலையை அறிவித்தது.

மீட்பு பணிகள்:

மேற்கு கொலம்பியாவில் உள்ளூர் நேரப்படி காலை 7:34 மணிக்கு 7.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, பல நகரங்களில் உயிர் பிழைத்தவர் களை தேடும் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் இதுவரை 111 பேர் உயிரிழந்ததாகவும், 87 பேர் காயமடைந்ததாகவும், 1,000க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் சேதமடைந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நிலநடுக்கத்தின் மையப் புள்ளி, கொலம்பியாவின் கடலோர சோகோ பிராந்தியத்தில் 100 கிலோ மீட்டர் (60 மைல்) ஆழத்தில் அமைந்திருந்தது. வறுமை நிறைந்த அந்தப் பகுதியில் 12 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொலம்பியாவின் மூன்றாவது பெரிய நகரமான காலியில் குறைந்தது 20 கட்டிடங்கள் இடிந்து விழுந்ததில், மக்கள் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கிக் கொண்டனர் என்று மேயர் அலெஜான்ட்ரோ எடர் கூறினார்.

”நாங்கள் அனைவரும் மிகுந்த துயரத்தில் ஆழ்ந்துள்ளோம். தற்போதைய நிலையில், உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன, டஜன் கணக்கானோர் காயமடைந்துள்ளனர், ஆனால் காணாமல் போனவர்களே பெரும்பான்மையாக உள்ளனர், என குயிப்டோ சமூகத் தலைவர் லூயிஸ் கிரிகோரியோ மோரேனோ ஏ.எஃப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.